Kanton Bern
Canton de Berne

hallo–bern.ch
salut–berne.ch

# தெரிந்துகொள்ள வேண்டியவை

திறந்திருக்கும் நேரங்கள் / விடுமுறை நாட்கள்
வதிவிட உரிமை அடையாளக்குறி
தனியார் பொறுப்புக் காப்பீடு
மதுபானம் / புகையிலை / போதைப் பொருட்கள்
வீட்டு மிருகங்கள்
சுவிஸில் ஒன்றாக வாழுதல்

# திறந்திருக்கும் நேரங்கள் / விடுமுறை நாட்கள்

சுவிஸில் அதிகமான கடைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டியிருக்கும். விதிவிலக்காக இருப்பவை, புகையிரத நிலையத்தில் மற்றும் எரிபொருள் நிரப்புமிடங்களில் உள்ள கடைகள். சட்டப்படியான விடுமுறை நாட்களை மாநிலமே ஒழுங்கு செய்யும்.

## விடுமுறை நாட்கள்

விடுமுறை நாட்கள் தொழிற்சட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 1 ஆகஸ்ட் (தேசியவிடுமுறை நாள் ) சுவிஸ் முழுவதற்குமான சட்டப்படியான விடுமுறைநாள். அதை விட ஒவ்வொரு மாநிலமும் மேலதிகமான சட்டப்படியான விடுமுறை நாட்களை தீர்மானிக்கலாம். பேர்ண் மாநிலத்தில் பின்வரும் சட்டரீதியான விடுமுறை நாட்கள் உள்ளன : புதுவருடம் (ஜனவரி 1), பெரியவெள்ளி (ஈஸ்ரருக்கு முந்தைய வெள்ளி), ஈஸ்டர் திங்கள் (ஈஸ்டர் இற்கு பிறகு வரும் திங்கள்), மோட்சத்திருநாள் (ஈஸ்ரர் ஞாயிருக்கு 40 நாட்களின் பின்புவரும் வியாழன் ), வெள்ளைத்திங்கள் (ஈஸ்டர் இற்கு பிறகு 50 ம் நாள்), தேசிய விடுமுறைநாள் (1.ஆகஸ்ட் ) நத்தார் (மார்கழி 25), செயின்ட் ஸ்டீபன் தினம் (மார்கழி 26).

## கடைகள் திறந்திருக்கும் நேரங்கள்

கடைகள் திறந்திருக்கும் நேரங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். பேர்ண் மாநிலத்தில் பொதுவாக கடைகள் திறக்கும் நேரம் பின்வருவனவாக உள்ளது:

- திங்கள் முதல் வெள்ளி வரை 6 மணி முதல் 20 மணி வரை
- சனிக்கிழமை 6 மணி முதல் 17 மணி வரை(இது விடுமுறை நாட்களுக்கு முதல் நாளுக்கும் பொருந்தும்.

வாரத்தில் ஒரு நாள் மாலை விற்பனை 22 மணி வரை.
ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும்பாலான கடைகள் பூட்டியிருக்கும். விதிவிலக்காக இருப்பவை, புகையிரத நிலையத்தில் மற்றும் எரிபொருள் நிரப்புமிடங்களில் உள்ள கடைகள், இவை சாதாரணமாக 7 நாட்களும் திறந்தும், இதில் பெரும்பாலானவை மற்றைய கடைகளைவிட முந்தித்திறந்தும் பிந்திப்பூட்டியும் இருக்கும். ஏனைய கடைகள் வருடத்தில் இரு தடவைகள் ஞாயிறு அல்லது விடுமுறை தினங்களில் திறக்கலாம்.

## அரச நிர்வாகங்கள் திறந்திருக்கும் நேரங்கள்

மாநில நிர்வாகங்களின் திறந்திருக்கும் நேரங்கள் மாறுபட்டவை. பொதுவாக இந்நிலையங்கள் திங்கள் முதல் வெள்ளி வரை காலையும் மாலையும் திறப்பதுடன் மதிய போசன நேரத்தில் மூடப்பட்டும் இருக்கும். கிராமசபை நிர்வாகங்கள் திறந்திருக்கும் நேரங்கள் வித்தியாசப்படும். எல்லாவற்றையும்விட ஆகச்சிறிய கிராமசபை நிர்வாகங்கள் திறக்கும் நேரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். முதலே இணையத்திலோ அன்றி தொலைபேசியிலோ திறந்திருக்கும் நேரங்கள் பற்றி அறிந்து கொள்ளச் சொல்லிப் பரிந்துரைக்கப்படுகிறது.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/opening-hours--holidays

Kanton Bern
Canton de Berne

hallo–bern.ch
salut–berne.ch

# வதிவிட உரிமை அடையாளக்குறி

நீண்ட காலத்திற்கு சுவிஸில் வாழ்ந்து வேலை செய்வதாயின் ஒரு அனுமதிப்பத்திரம் தேவை. பல தரப்பட்ட வதிவிட உரிமைகளுக்கும் நிரந்தர வதிவிட உரிமைக்கும் வித்தியாசங்கள் உண்டு.

## அனுமதி வகைகள்

எவர் சுவிஸில் தங்கியுள்ள காலப்பகுதியில் வேலை செய்கிறாரோ அன்றி 3 மாதத்திற்கு மேல் தங்குகிறாரோ அவருக்கு ஒரு அனுமதி தேவைப்படுகிறது.
சுவிஸில் தங்கியிருப்பது பற்றிய அனைத்து கேள்விகளுக்கும் தொடர்பு கொள்ளும் முதல் புள்ளியாக குடியிருப்பு கிராமசபை உள்ளது. அது குடியேறல் சேவைக்கு குடியிருப்பு அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்புகிறது. அவர்கள் அந்த விண்ணப்பம் பற்றி முடிவு செய்கிறார்கள்.

இவற்றில் குறுகியகாலத் தங்குமிட அனுமதி (1 வருடம் வரை), தங்குமிட அனுமதி (பிராஜாவுரிமையை பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட 1 அல்லது 5 வருட கால எல்லையுடன்) மற்றும் நிரந்தர வதிவிட உரிமை (காலவரையற்றது) மற்றும் எல்லைகடந்து வேலை செய்பவர் அனுமதிப்பத்திரம் வரை வித்தியாசப்படுகிறது.

குறுகியகால வதிவிடஉரிமை L(அடையாள அட்டை L) இந்த அனுமதி உள்ளவர்கள் குறிப்பிட்ட கால எல்லை வரை (அதிகமாக 1 வருடம்) ஒரு குறிப்பிட்ட காரணத்தையிட்டு சுவிஸில் வாழலாம். அதிகமான EU/EFTA நாட்டுப் பிரஜைகள் வேலை வாய்ப்புக் கிடைத்தால் 3 மாதம் முதல் ஆதாரத்துடன் (வேலைஒப்பந்தம்)1 வருடம் வரை இருக்கலாம்.
வதிவிட உரிமை B (B அடையாளப்பத்திரம் ) இந்த அனுமதி உள்ளவர்கள் நீண்ட காலம் சுவிஸில் தங்கலாம். EU/EFTA நாட்டுப் பிரஜைகள் தமக்கு 1 வருடத்திற்கு மேற்பட்ட வேலைஒப்பந்தம் உள்ளது என ஆதாரம் காட்டினால் அவர்கள் 1 வருடத்திற்கு மேலாக வேலை செய்ய முடியும். EU/EFTA நாட்டுப்பிரஜைகளிற்கான அனுமதி 5 வருடங்களிற்கு வழங்கப்படுகிறது. மற்றைய நாட்டவர்களுக்கு 1 வருடத்திற்கு வழங்கப்படுகிறது. அதன்பின்பு அவர்கள் விசா நீடிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்த விசா நீடிப்பு எதாவது நிபந்தனைகளையொட்டி கிடைக்கலாம். உதாரணமாக டொச் வகுப்புக்குப் போதல். சில சமயம் ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அல்லது நலன்புரி விடயங்களில் மற்றவரைச் சார்ந்திருந்தால் வர வேண்டிய விசா நீடிப்புத் தடைப்படலாம். அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்கும் B வதிவிட அனுமதி கிடைக்கும்.
நிரந்தர வதிவிட அனுமதி C (C அடையாளப்பத்திரம் ) சுவிஸில் தொடர்ந்து 5 அல்லது 10 வருடங்கள் கடந்து தொடர்ந்து வசித்தால் இந்த அனுமதி கிடைக்கும். இங்கேயும், EU / EFTA நாடுகள் மற்றும் மூன்றாம் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது.

தஞ்சம் வழங்கும் பகுதியில் அனுமதி:
- தஞ்சம் கோருவோர் (N-அடையாளப்பத்திரம்)
- தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் (F-அடையாளப்பத்திரம்)
- தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் (F-அடையாளப்பத்திரம்)
- புகலிடம் அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் (B-அடையாளப்பத்திரம்)

## வெளிநாட்டவர் அடையாளஅட்டை

சுவிஸில் வதியும் வெளிநாட்டவர்கள் வெளிநாட்டவர்களுக்குரிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வார்கள். அடையாள அட்டையின் வகை பல்வேறு நிபந்தனைகளைப் கொண்டுள்ளது. கிரெடிட் கார்டு வடிவத்திலும் மற்றும் காகிதத்தால் செய்யப்பட்ட (உயிரியல் அடையாளங்கள் அற்ற வெளிநாட்டினர்) அடையாள அட்டைகள். (உயிரியல் அடையாளங்கள் அற்ற வெளிநாட்டினர் அடையாள அட்டைகள், Nicht biometrischer Ausländerausweis). சிலர் ஒரு உயிரியல் அடையாளங்கள் உள்ள வெளிநாட்டினர் அடையாள அட்டைகளை பெறுவர். இந்த அடையாள அட்டையில் உள்ள ஒரு தரவு அட்டையில் விரலடையாளமும் படமும் கையொப்பமும் சேர்க்கப்பட்டிருக்கும். உரிய தனிநபர்கள் புலம்பெயர் சேவையிலிருந்து ஒரு அழைப்பினைப் பெறுவார்கள். அதன் பிறகு, இவர்கள் தம் உயிரியல் தரவுகளை பேர்ண் மாநில கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை பிரிவில் பதிய வைக்க வேண்டும். இங்கு தாமே அதற்கான நேரத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். அனைத்து அடையாள அட்டைகளையும் வாழிட கிராமசபையில் பெற்றுக் கொள்ளலாம். அடையாள அட்டை தொலைந்தால் அல்லது களவாடப்பட்டால் உடனே பொலிஸில் முறையிடவும்.

## நீடிப்புச் செய்தல்

தேசிய இனத்தைப் பொறுத்தும் தங்கும் நிலையைப் பொறுத்தும் வதிவிடஉரிமை வித்தியாசமான கால இடைவெளிகளில் நீடிப்புச் செய்து கொடுக்கப்படும். நீடிப்புச் செய்யவேண்டிய காலத்தில் ஒரு பத்திரம் வரும் (Verfallsanzeige | avis de fin de validité) அதை நிரப்பி அதனுடன் பாவிக்கக்கூடிய கடவுச்சீட்டையும் சேர்த்து வதிவிட அனுமதி முடிவதற்கு 2 கிழமைகளுக்கு முன்பே வதியும் கிராமசபையில் கையளிக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து குடிமக்கள் சேவை திணைக்களத்திற்கு (ABEV | OPOP) அனுப்புவார்கள். அங்கு நீடிப்புச் செய்வதற்குரிய தகைமைகள் சோதிக்கப்படும். ஏதாவது வினாக்களிருப்பின் அதுபற்றி கிராமசபை அல்லது குடிமக்கள் சேவை திணைக்களம் (ABEV | OPOP) தெரிவிக்கும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/residence-permit

# தனியார் பொறுப்புக் காப்பீடு

"ஒவ்வொரு வளர்ந்தோரும் ஒரு தனியார் பொறுப்புக் காப்பீடு செய்யவேண்டும். இது ஒருவர் மற்றவருக்கு அல்லது பொருட்களுக்குத் தவறுதலாகச் சேதத்தை ஏற்படுத்தினால் அந்த சேதத்திற்கான செலவைப் பொறுப்பெடுக்கும். "

## சொந்தப் பொறுப்பு

ஒருவர் மற்றவரைக் காயப்படுத்தினாலோ அல்லது மற்றவர் பொருட்களைச் சேதப்படுத்தினாலோ அதற்குரிய செலவுகளுக்கு அவரே பொறுப்பாகும். சேதங்கள் தவறுதலாக நடந்தாலும் கூட ஒரே நியதி தான். குழந்தைகள் அல்லது செல்லப்பிராணிகளால் ஏற்படும் சேதத்திற்கும் ஒருவர் பொறுப்பேற்க முடியும். இந்தச் செலவுகள் மிக அதிகமாக இருக்கும். உதாரணத்திற்குப் பனிச்சறுக்கலின் போது யாரையாவது காயப்படுத்தினால் இநதச் சேதம் 100 ஆயிரம் பிராங்குகள்வரை இருக்கும்.

## தனியார் பொறுப்புக் காப்பீடு

ஒரு இழப்பு ஏற்படும் போது எதிர்கொள்ள வேண்டிய நிதி நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு தனியார் பொறுப்புக் காப்பீடு செய்திருப்பது புத்திசாலித்தனம். இது அதிகமாகத் தனிப்பட்ட காப்புறுதி வசதிகளுக்குள் வரும். தனியார் பொறுப்புக் காப்பீடு பொதுவாக ஒரு வீட்டில் வாழும் அனைவருக்கும் ஒன்றாகச் சேர்த்துச் செய்யப்படும். இந்தக் காப்பீடு கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியது என்றில்லை. ஆனாலும் செய்வது நல்லது எனப் பரிந்துரை செய்யப்படுகிறது. பல வாடகைக்கு விடுபவர்களும் பொறுப்புக்காப்புறுதியை கேட்கிறார்கள்.

## காப்பீட்டுச் சேவைகள்

தனியார் பொறுப்புக் காப்பீடு காப்பீடு செய்தவரால் ஏற்படுத்தப்படும்; பொருட்கள் மனிதருக்குரிய சேதங்களின் செலவுகளைப் பொறுப்பெடுக்கும். அதன் கீழ் திருத்துவதற்குரிய செலவுகள் சுகமடையும் செலவுகள் சம்பள இழப்பு இழப்பீடு அல்லது வலிக்குரிய பணம் என்பன அடங்கும். தனியார் பொறுப்புக் காப்பீடு வீட்டு மிருகங்களால் ஏற்படுத்தப்படும் சேதங்களுக்கும் பொறுப்பெடுக்கும். ஒரே வீட்டில் வசிப்பவர்களால் சேதம் விளையுமானால் காப்பீடு பொறுப்பெடுக்காது. சேதங்களை வேண்டுமென்றோ அன்றி முரட்டுத்தனமாக ஏற்படுத்தினாலோ காப்பீடு பொறுப்பெடுக்காது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/personal-liability-insurance

# மதுபானம் / புகையிலை / போதைப் பொருட்கள்

"போதைப் பொருட்கள் வைத்திருப்பது, பாவிப்பது அன்றி விற்பனை செய்வது தண்டணைக்குரியது. மதுபானம் புகையிலை வாங்குவதற்கும்; வயதெல்லை உண்டு. "

## போதைப் பொருட்கள்

சட்டவிரோத போதைப்பொருட்கள் வைத்திருத்தல், விற்றல் அல்லது பாவித்தல் தண்டணைக்குரிய குற்றம். இது சிறிய அளவிற்கும் பொருந்தும். இதில் எவை சட்டவிரோதமாவை என்பது மருந்துப்பாவனைச்சட்டத்தில் (Betäubungsmittelgesetz | loi sur les stupéfiants) வரையறுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருட்களின் வணிக அடிப்படையான விற்பனையானது அதிகூடிய தண்டணைக்குட்படலாம்.

## மதுபானமும் புகையிலையும்

மதுபானமும் புகையிலையும் விற்பதற்கும் வயதெல்லை உண்டு. பேர்ண் மாநிலத்தில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கு மதுபானவகைகள் உ+மாக பியர்,வைன்,ஆப்பிள் வைன் விற்கவோ அல்லது கொடுத்துவிடவோ கூடாது. சில மதுபானவகைகளை உம்: Spirituosen மற்றும் புகையிலைப்பொருட்கள் என்பன 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் விற்பனை செய்யலாம். எவராவது மதுபானம் அல்லது புகையிலை பொருட்களை இளைஞர்களுக்கு கொடுதல் தண்டனைக்குரியது. உணவகங்கள் மற்றும் கடைகளில் உள்ள ஊழியர்கள் வாடிக்கையாளர்களின் வயதை சரிபார்க்க வேண்டும்.

## புகைத்தலுக்குத் தடை

சுவிஸில் புகைத்தலுக்கான தடை மாநிலங்களுக்கிடையில் வித்தியாசமாக கட்டுப்படுத்தப்படுகிறது. பேர்ண் மாநிலத்தில் புகைத்தல் தடையானது
மூடப்பட்ட, பகிரங்க நுழைவாயில் கொண்ட இடங்கள் வைத்தியசாலை, நிர்வாகக் கட்டிடங்கள், பாடசாலை, தொல்பொருட்காட்சியகம், சினிமா, அரங்கு , புகையிரதம், பஸ், கடைகள், கடைத்தொகுதிகள் ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
உணவகங்களுக்குள் புகைபிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. விதிவிலக்கு புகைபிடிக்கும் அறைகள், அவை பிரிக்கப்பட்ட மற்றும் காற்றோட்டமாக உள்ளன, ஆனால் இவை குறைவாகவே உள்ளன. புகைபிடித்தல் தடை சுகாதார அபாயங்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கம் கொண்டிருக்கின்றன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/alcohol--tobacco--drugs

# வீட்டு மிருகங்கள்

"எவர் வீட்டு மிருகங்கள் வைத்திருக்கிறாரோ அவர் பலவித விதிகளைக் கவனிக்க வேண்டும். சில மிருக வகைகளை எல்லாக் குடியிருப்புகளிலும் வைத்திருக்க முடியாது. நாய்களுக்கான வரிகள் உள்ளன. "

## வீட்டு மிருகங்களை வளர்த்தல்

எவர் வாடகை வீட்டில் குடியிருக்கிறாரோ அவர் கினி பன்றி, வெள்ளெலி கனரிப்பறவை மீன்கள் போன்ற சிறிய வீட்டு மிருகங்களை வளர்க்க முடியாது. பெரிய மிருகங்களான சிறிய நாய் பூனை ஆகியவற்றையும் வளர்க்கக்கூடாது எனவும் வாடகை ஒப்பந்தத்தில் சில வேளை போட்டிருக்கலாம். சத்தம் போடும் அல்லது ஆபத்து விளைவிக்கும் மிருகங்களையும் வீட்டுக்காரர் தடை செய்யலாம். அதை விட மிருகங்களை வளர்ப்பவர்கள் மிருகப்பாதுகாப்புச்சட்டத்தைக் கவனிக்கவேண்டும். உதாரணத்திற்குச் சில மிருகங்களைத் தனியே வளர்க்கக்கூடாது (முயல் ). வளர்க்கும் கூடுகள் குறைந்தபட்சத் தேவையையும் மற்றும் தேவையான வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். அதிக விலங்குகளை (கவர்ச்சியான விலங்குகள்) சுவிசிற்குள் கொண்டுவரமுடியாது. அதைவிட அதற்கு விசேடமான அனுமதி கால்நடை இலாகாவில் பெறவேண்டும்.

## நாய்கள்

பேர்ண் மாநிலத்தில் நாய்களுக்கு விசேட சட்டமுண்டு. அதனுள் நாய் வளர்ப்பவர்களுக்கு என்ன பொறுப்புகள் உண்டு என எழுதப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை மிருகவைத்தியரிடம் அறிந்து கொள்ளலாம்.

- சுவிஸில் எல்லா நாய்களுக்கும் ஒரு நுண்தகட்டில் அதன் அனைத்துத் தகவல்களும் பதியப்படுவதுடன் AMICUS தரவுத்தளத்திலும் பதியப்பட்டிருக்கும். நாய்க்கு வழங்கப்படும் ஒரு வீட்டுமிருகம் என்ற அடையாளஅட்டை, ஐரோப்பிய நாடுகளுக்குள் நாயையும் கூட்டிச்செல்ல விரும்பினால் தேவைப்படும்.
- நாய்களைக் கிராமசபையில் பதியவேண்டும். ஒவ்வொரு நாய்க்கும் வருடத்திற்கொரு முறை நாய்வரி கட்டவேண்டும். அத்துடன் நாய் வளர்ப்பவர்களுக்கு ஒரு பொறுப்புக்காப்புறுதி கட்டாயம்.
- நாயை வளர்ப்பவர் அதன் மலத்தை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். யார் இதைச் செய்யாமல் விட்டாலும் அபராதப்பணம் மூலம் தண்டிக்கப்படுவர்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/pets

# சுவிஸில் ஒன்றாக வாழுதல்

ஒவ்வொரு நாட்டிற்கும் அதனுடைய கலாச்சாரத் தனித்தன்மை இருக்கும். அது போலவே சுவிசிக்கும் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒருசில எழுதாச் சட்டங்கள் உண்டு. எனினும் இவை சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி மாறுபடலாம்.

## பல வகையான கலாச்சாரங்கள்

சுவிஸ் ஒரு வண்ணமயமான கலாச்சாரக்கலவையான நாடு. குறிப்பாக நாலு தேசிய மொழிபிரதேசங்களை கொண்டது. வேறுவேறு மாநிலங்களின் எண்ணங்கள் வேறுவேறாக இருப்பதுபற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை. டொச் சுவிஸ் பிரதேச கலாச்சாரம் பிரான்ஸ் சுவிஸ்பிரதேச கலாச்சாரத்துடன் ஒன்றாக இருக்கவேண்டிய அவசியமில்லை. அத்துடன் நகர மற்றும் கிராமப்புறங்களுக்கிடையிலும் பெரிய வித்தியாசம் இருக்கும். எனினும் அவற்றிற்கிடையில் சிறிதளவு ஒற்றுமையும் சேர்ந்து இருக்கும்.

## வணக்கம் தெரிவித்தல்

சுவிஸில் வணக்கம் தெரிவிக்கும் போது ஆண்கள் பெண்கள் என்றாலும் கூடக் கையைக் கொடுத்து கண்களுக்குள் நேராகப் பார்க்க வேண்டும். பேர்ண் மாநிலத்தில் வழமையான வாழ்த்து "Grüessech" என்று பேர்ண் டொச் இலும் "Bonjour " பிரான்ஸ் மொழியிலும் இருக்கும் (நண்பர்களுக்கிடையில் வாழ்த்து மொழி வேறு வடிவில் "Hallo" அல்லது "Tschou" என்று டொச் இலும்,"Salut "என்று பிரான்ஸ் இலும் ). சில பிரதேசங்களில் வேறு வடிவிலும் இருக்கும் I எவருக்கு நிச்சயமில்லாத நிலை தோன்றுகிறதோ "Grüessech" அல்லது "Bonjour " என்று கூறலாம். கிராமப்புறங்களில் ஒருவரையொருவர் தெரியாவிட்டாலும்கூட வீதியில் காணும்போது வணக்கம் தெரிவிப்பார்கள். "நன்றி " "பரவாயில்லை " என்பன முக்கியமானவை. உதாரணமாக ஒரு கடையிலோ அல்லது உணவகத்திலோ பலமுறை "நன்றி " "பரவாயில்லை " சொல்வது சம்பிரதாயமாகி விட்டது.

## நேரம் தவறாமை

அதிகமான பிரபல்யமானது சுவிஸ் மக்கள் நேரம் தவறாமையைக் கைக்கொள்ளல். யாராவது 5 நிமிடங்களைவிடக் கூடப்பிந்தினால் தொலைபேசியில் அழைத்து தெரிவிக்கலாம். பிரதானமாக இந்தத் தொழில் உலகில் நேரந்தவறாமை உயர்ந்த பெறுமதியாகக் கருதப்படும்.
5 நிமிடங்கள் கூட பிந்தியதாக கருதப்படும். எவராவது பிந்தினால், தனது மேலாளருக்கு அல்லது சக வேலை செய்பவருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். யாரையாவது தனிப்பட்ட முறையில் சந்திக்க விரும்பினால் முன்கூட்டியே நேரம் தீர்மானிக்கப்படுகிறது. முன்னறிவித்தலின்றி போவது தனிப்பட்ட இடங்களிலும் வழமையில் இருப்பதில்லை.

## மறைமுகத் தொடர்பாடல்

ஒருவருக்கொருவர் சரியாகப் புரிந்துகொள்வது எப்போதும் எளிதானது அல்ல, குறிப்பாக உங்களிடம் (இன்னும்) பொதுவான மொழி இல்லையென்றால். சுவிட்சர்லாந்தில் தொடர்பு கொள்ளும் பழக்கமும் மனிதர்களுக்கு மனிதர் வேறுபடுகிறது. இருப்பினும், பொதுவாக, மரியாதை மிகவும் முக்கியமானது என்று ஒருவர் கூறலாம். தங்களை நேரடியாகவும் வெளிப்படையாகவும் வெளிப்படுத்தும் நபர்கள் இருக்கிறார்கள், ஆனால் நேரடி உரையாடல்களைத் பெரும்பாலும் தவிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த விமர்சனங்கள் பெரும்பாலும் மறைமுகமாக தெரிவிக்கப்படுகின்றன.
இன்னும், சில நேரங்களில் விமர்சனம் கவனதாகில் கொள்ளப்படுகிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது எளிதானதல்ல மற்றும் தவறான புரிதல்களுக்கு வழிவகுக்கும். மற்றவர் சொல்வதைக் நன்கு கேட்பது, நீங்கள் கேட்டதை மீண்டும் சொல்வது மற்றும் ஏதாவது புரியவில்லை என்றால் கேள்விகள் கேட்பது உதவலாம். இது எழுதப்பட்ட தகவல்தொடர்புக்கும் பொருந்தும். சில நேரங்களில் மோதல் சூழ்நிலைகளில் நேரடி மோதல் தவிர்க்கப்படுகிறது. உதாரணமாக, நேரிடையான உரையாடலைத் தேடுவதற்குப் பதிலாக, உங்கள் அயலவரிடம் ஏதாவது தொந்தரவு செய்தால், உங்களுக்கு ஒரு கடிதம் வரும். தெளிவில்லாத பிரச்சினையாயின் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் விசாரிப்பது எப்போதும் நலமானதாகும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/good-to-know/living-together-in-switzerland